DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : அழகன் (Pw.9)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2026

(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 5வது எதிரிகள் ஆஜர். 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை –**

நான் தற்போது கரிசல்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை கடந்த 10 வருடத்திற்கு முன்பு கரிசல்குளத்தில் உள்ள கருப்பயையா தோட்டத்தில் கிணற்று வேலை செய்து கொண்டிருந்தபோது நான் வேலை செய்த கிணறு அருகே உள்ள ரோட்டில் செயின் அறுத்துசென்றது சம்பந்தமாக ரோட்டில் வைத்து வேலை முடிந்து மாலையில் கையொப்பம் செய்தேன். (**அந்த பார்வை மகஜரில் உள்ள**

**கையொப்பம் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 02.01.2016ம் தேதியன்று பகல் 12மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரும் வழக்கில் சம்பவ இடத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது திருச்சுழி போலிசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் ராமச்சந்திரன் என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கோபால் (Pw.8)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2026

(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 4, 5வது எதிரிகள் ஆஜர். 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது_)

**முதல் விசாரணை –**

நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடத்திற்கு முன்பு கரிசல்குளத்தில் உள்ள கருணாநிதியின் தோட்டத்தில் கிணறு தூர்வாறும் வேலை செய்து கொண்டிருக்கும்போது நான் கிணற்றிற்குள் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது காலை 9.00மணியளவில் பைக்கில் சென்ற ஒரு டீச்சரின் செயினை அறுத்துவிட்டு சென்றதாக கிரேன் ஆபரேட்டர் என்னிடம் கூறினார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 02.01.2016ம் தேதியன்று நான் எனது ஊரைச் சேர்ந்த பொன்இருளன், பழனி மற்றும் முருகன் ஆகியோர் தமிழ்பாடி – கரிசல்குளம் சாலையில் இடது புறம் உள்ள கருணாநிதிக்கு சொந்தமான தோட்டத்தில் கிணறு வேலை துார்வாறும் வேலை நடக்கும்போது காலை 8.40மணியளவில் ஐயோ தங்க தாலி செயினை அறுத்து செல்கிறார்கள் என்று கூக்குரல் சத்தம் கேட்டவுடன் நானும் என்னுடன்வேலை பார்க்கும் நபர்களும் சென்று பார்த்தபோது பைக்கில் வந்த ஒரு பெண்ணிடம் பைக்கில் வந்த இரு நபர்கள் சண்டை போட்டு செயினை பறித்து கொண்டு தமிழ்பாடி பக்கம் வேகமாக சென்றார்கள் என்றும் உடனே நானும் என்னுடன் வேலை செய்தவர்களும் அந்த இடத்திற்கு சென்றபோது கரிசல்குளத்தில் ஆசிரியராக வேலை செய்யும் ஜெயா என்பவர் அருகில் இருந்தார் என்றும் அவரிடம் கேட்டபோது பைக்கில் வந்த இரு நபர்களில் பின்னால் உட்கார்ந்திருந்த ஒரு நபர் கழுத்தில் இருந்த 6 பவுண் செயினை அறுத்துக் கொண்டு தமிழ்பாடி பக்கம் சென்றார் என்றும் நாங்கள் செயினை அறுத்தவரை தேடிப்பார்க்கும்போது அவர்களை காணவில்லை என்றும் அதன்பிறகு ஜெயா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பொன்இருளன் (Pw.7)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2026

(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது_)

**முதல் விசாரணை –**

நான் தற்போது சாமிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 02.01.2016ம் தேதியன்று நான் எனது ஊரைச் சேர்ந்த கோபால், பழனி மற்றும் முருகன் ஆகியோர் தமிழ்பாடி – கரிசல்குளம்

சாலையில் இடது புறம் உள்ள கருணாநிதிக்கு சொந்தமான தோட்டத்தில் கிணறு வேலை தூர்வாறும் வேலை நடக்கும்போது காலை 8.40மணியளவில் ஐயோ தங்க தாலி செயினை அறுத்து செல்கிறார்கள் என்று கூக்குரல் சத்தம் கேட்டவுடன் நானும் என்னுடன்வேலை பார்க்கும் நபர்களும் சென்று பார்த்தபோது பைக்கில் வந்த ஒரு பெண்ணிடம் பைக்கில் வந்த இரு நபர்கள் சண்டை போட்டு செயினை பறித்து கொண்டு தமிழ்பாடி பக்கம் வேகமாக சென்றார்கள் என்றும் உடனே நானும் என்னுடன் வேலை செய்தவர்களும் அந்த இடத்திற்கு சென்றபோது கரிசல்குளத்தில் ஆசிரியராக வேலை செய்யும் ஜெயா என்பவர் அருகில் இருந்தார் என்றும் அவரிடம் கேட்டபோது பைக்கில் வந்த இரு நபர்களில் பின்னால் உட்கார்ந்திருந்த ஒரு நபர் கழுத்தில் இருந்த 6 பவுண் செயினை அறுத்துக் கொண்டு தமிழ்பாடி பக்கம் சென்றார் என்றும் நாங்கள் செயினை அறுத்தவரை தேடிப்பார்க்கும்போது அவர்களை காணவில்லை என்றும் அதன்பிறகு ஜெயா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 88/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயா (Pw.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March 2026

(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரி ஆஜர். 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை –**

நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் இனக்கனேரி அரசு ஆரம்ப பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். கடந்த 02.01.2016ம் தேதியன்று 8.40மணிக்கு அரையாண்டு விடுமுறை முடிந்து பள்ளிக்கு வேலைக்கு டீ.கரிசல்குளத்தில் உள்ள பள்ளிக்கு செல்வதற்காக எனது கணவர் என்னை டி.கரிசல்குளத்திற்கு முன்னால் உள்ள ஒரு தோட்டம் அருகே என்னை இறக்கிவிட்டுவிட்டு அவர் பள்ளிக்கு சென்றுவிட்டார். தமிழ்பாடி – சாமிநத்தம் சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக பள்ளிக்கு நடந்து

கொண்டிருந்தேன். டி.கரிசல்குளத்திற்கு முன்னால் இருக்கும் பாலத்தின் அருகே நான் காலை 8.40மணியளவில் சென்றபோது ஏய் என்று ஆண் நபரின் குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்க்கும்போது சாலையில் கூட்டமாக இருந்தது. நான் வந்த வழியிலேயே திரும்பிச் சென்று பார்த்தபோது ஜெயந்தி ஆசிரியர் அங்கு இருந்தார். நான் ஏன் கூட்டமாக இருக்கிறது என்று அவரிடம் கேட்டபோது 6 பவுண் தங்க செயினை இரு சக்கர வாகனத்தில் வந்த இரு நபர்கள் அறுத்துவிட்டு சென்றதாக கூறினார். அந்த நபர்கள் வந்தவழியிலேயே சென்றுவிட்டதாக கூறினார். ஜெயந்தி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். சம்பவம் ஜெயந்தி ஆசிரியர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து எங்கள் பள்ளி எத்தனை கிலோ மீட்டர் துாரம் இருக்கும் என்றால் 1/2 கிமீ தொலைவு இருக்கும். எனது கணவர் பள்ளிக்கு அருகில் சம்பவ சமயத்தில் இறக்கிவிட்டார். சத்தம் கேட்டு திரும்பி பார்க்கும்போது அங்கு கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். யாருக்கு என்ன நடந்தது என்றும் யாருடையது நகை பறிக்கப்பட்டது என்ற விபரம் அங்கு சென்ற பின்புதான் தெரியும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.